உ

சிவமயம்



சுன்னாகத்தை பிறப்பிடமாகவும்
தெல்லிப்பழையை உறைவிடமாகவும்
கொண்ட

## திரு. பொன்னுத்துரை நாகரத்தினம்

ஓய்வு பெற்ற
ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர்,
அவர்களின்
மறைவில் எழுந்த

# நினைவலைகள்

03-07-1994

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


உ

சிவமயம்

சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும்
தெல்லிப்பழையை உறைவிடமாகவும்
ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஓய்வு பெற்ற அதிபரும்
யாழ். பல்கலைக்கழக மூதவை உறுப்பினருமாகிய

# திரு. பொன்னுத்துரை நாகரத்தினம் அவர்கள்

## அமரத்துவம் எய்தியமை குறித்து



# எழுந்த நினைவலைகள்

பவ ஷ ஆனி மீ 19 உ

1994

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## காணிக்கை

ஒரு சிறந்த குடும்பத் தலைவனாகவும் நற்பண்பினனாகவும் வாழ்ந்து எம்மை நல் வழிப்படுத்தி கண்ணிமைபோல எம்மைக் காத்து வழிப்படுத்திய எமது அன்பிற்குரிய தந்தையார் திரு. பொன். நாகரத்தினம் அவர் களின் பாதகமலங்களில் இதனைக் காணிக்கை ஆக்குகின்றோம்.

**மனைவி - பிள்ளைகள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



## கட்டளைக் கலித்துறை

சென்றே மறைந்தனை என்றுரை தம்செவி யுற்றிடலும்
நின்றே திகைத்தனர் நேருமுன் சுற்றமந் நீணிலத்தில்
நன்றே புரிந்திட நல்லுற வாகிய நண்ப ரெல்லாம்
என்றோ வுமையினிக் காண்பதென் றேங்கி யிரங்கினரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு. பொன்னுத்துரை நாகரத்தினம் *B. Sc. (Hons)*

அவர்கள்



தோற்றம் :
**1929-08-08**

மறைவு :
**1994-06-02**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# பஞ்சபுராணப் பாடல்கள்

## தேவாரம்

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள்கங்கை முடிமே லணிந்தென்
உளமே புகுந்தவ தனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனிபாம் பிரண்டுமுடனே
ஆசறு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்குமிகவே.

## திருவாசகம்

பால்நினைந் தூட்டுந் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

## திருவிசைப்பா

ஏகநா யகனை யிமையவர்க் கரசை
யென்னுயிர்க் கமுதினை யெதிரில்
போகநா யகனைப் புயல்வணற் கருளிப்
பொன்னெடுஞ் சிவிகையா வூர்ந்த
மேகநா யகனை மிகுதிரு வீழி
மிழலைவிண் ணிழிசெழுங் கோயில்
யோகநா யகனை யன்றிமற் றொன்று
முண்டென வுணர்கிலேன் யானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி யழுதிடப்
பாற்கட லீந்தபிரான்
மாலுக்குச் சக்கர மன்றருள் செய்தவன்
மன்னிய தில்லைதன்னு
ளாலிக்கு மந்தணர் வாழ்கின்ற சிற்றம்
பலமே யிடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

உலகெலா முணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

## திருப்புகழ்

இசைந்த ஏறுங் கரியுரி போர்வையும் எழில்நீறும்
இலங்கு நூலும் புலியத ளாடையு மழுமானும்
அசைந்த தோடுஞ் சிரமணி மாலையு முடிமீதே
அணிந்த ஈசன் பரிவுடன் மேவிய குருநாதா
உசந்த சூரன் கிளையுடன் வேரற முனிவோனே
உகந்த பாசக் கயிறொடு தூதுவர் நலியாதே
அசந்த போதென் துயர்கெட மாமயில் வரவேணும்
அமைந்த வேலும் புயமிசை மேவிய பெருமாளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்
தெல்லிப்பழை
வீணாக்கடவை
காசி விநாயகர் தேவஸ்தானம்
சிவஸ்ரீ சி. கணேசலிங்கக் குருக்கள்

# நன்னெறியும் நற்பண்பும் மிக்கவர் அதிபர் நாகரத்தினம் அவர்கள்

அதிபர் நாகரத்தினம் அவர்கள் சுன்னாகத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். பெரியார் பொன்னுத்துரை அவர்கட்கும் பருவதபத்தினிப்பிள்ளை அவர்கட்கும் புத்திரராக 08-08-1929 இல் பிறந்தார். இளம்பிராயத்திலே கல்வியில் ஆர்வம்மிக்கவராகத் திகழ்ந்தவர். ஆரம்பக்கல்வி கற்றபின் ஸ்கந்தவரோதயக் கல்லூரியிற் கல்விபயின்று விசேடதகமைபெற்றார். இதன்மேற் பல்கலைக்கழகப் படிப்பைமேற்கொண்டு பட்டதாரியானார். படிப்பை நிறைவுசெய்ததும் ஆசிரியத் தொழிலை மேற்கொண்டு ஆசிரியராகக் கடமையாற்றினார்.

அமரர் கனகசுந்தரம் குடும்பத்தினர் தெல்லிப்பழையிலே சீரும் சிறப்பும் மிக்கவர்களாக விளங்கிவந்தவர்கள். காசி விநாயகருடைய திருப்பணிகள், கும்பாபிஷேகம் முதலாயவற்றை எல்லாம் நிறைவுசெய்வதற்குப் பெருநிதியத்தை வழங்கி முன் நின்று உழைத்தவர்கள். திரு. நாகரத்தினம் அவர்கள் மேற்படி கனகசுந்தரம் தம்பதிகளின் புத்திரியாகிய வள்ளிநாயகியைத் திருமணஞ் செய்துகொண்டார். இவர்களுக்குச் சுதர்சன், சுகந்தன், சுகிர்தன் ஆகிய மூன்று புத்திரர்கள். இவர்கள் மூவரையும் கல்வியில் மேம்பாட்டுடன் விளங்கச் செய்து சற்புத்திரர்களாக உருவாக்கினார். திருவாளர் நாகரத்தினம் குடும்பத்தினரும் காசிவிநாயகர் ஆலயத்துடன் நெருங்கிய தொடர்பு பூண்டவர்கள். பாலர் ஞானோதய சபையின் பணிகளிலும் பங்குகொண்டு வருபவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியார் நாகரத்தினம் அவர்கள் எவருடனும் இனிமையாகப் பேசுவார். எவருக்கும் கெடுதிசெய்ய நினைக்கமாட்டார். மாணவர்களது கல்விவளர்ச்சியில்மிகுந்தஈடுபாடுகொண்டவராகத் திகழ்ந்தார். ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் உபஅதிபராக பல ஆண்டுகள் பணிபுரிந்தார். இதன்மேல் மேற்படி கல்லூரியின் அதிபராகப் பதவியேற்றதும் இப்பெருமகன் செய்த சேவைகள் அளவிடற்கரியன. பின்பு கொத்தணி அதிபராகக் கடமையாற்றி 08 - 08 - 1989 இல் இளைப்பாறினார்.

13 - 01 - 1994 தொடக்கம் பல்கலைக்கழக மூதவை உறுப்பினராக இருந்து பெருந்தொண்டாற்றிவந்தார். இவ்வாறு நாட்டிற்கும் சுற்றத்தவர்கட்கும் அருந்தொண்டு புரிந்து வந்த அதிபர் அவர்களை எவரும் என்றும் மறக்கமுடியாது. நன்நெறியாளராகவும் நற்பண்பாளராகவும் விளங்கிய திரு நாகரத்தினம் அவர்கள் இன்றைய சமூகத்திற்கு ஓர் முன்னோடியாகவும் விளங்கினார். அதிபர் அவர்களுக்குத் திடீரென ஏற்பட்ட சுகவீனங்காரணமாக 02 - 06 - 1994 இல் இவ்வுலக வாழ்வை நீத்தார். இவரது பிரிவால் துயருறும் மனைவி, மக்கள் சுற்றத்தவர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அநுதாபங்கள். இவரின் ஆன்மா சாந்தியடைவதாக.

ஓம்சாந்தி! ஓம்சாந்தி!! ஓம்சாந்தி!!!

இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும்பொருட்டேயாகும்.

— நாவலர்பெருமான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

அம்பாள் துணை

தெல்லிப்பழை

## ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

பிரதம சிவாச்சாரியார்

## சிவஸ்ரீ இ. சுந்தரேஸ்வரக் குருக்கள்

# ஆத்ம சாந்தி உரை

பெரியார் திரு. பொ. நாகரத்தினம் அவர்களின் மறைவுச் செய்தி கேட்டுத் தாங்கமுடியாத துயரமடைந்தோம். ஆயினும் பிறந்தவர் எவராயினும் ஒருநாள் இவ்வுடலை விட்டு உயிர் நீங்கி இறப்பது நியதி. இந்நியதியை வென்றவர் ஒருவரும் இல்லை. ஆனால் இவ்வுலகில் ஒருவர் எவ்வாறாக வாழ்ந்தார் என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும்.

திருவாளர் பொ. நாகரத்தினம் அவர்கள் பொன்னுத்துரை அவர்களுக்கும் பருவதபத்தினிப்பிள்ளை அவர்களுக்கும் தவப்புதல்வராகப் பிறந்தார். இவர் வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்குரிய கல்விப் பெருஞ்செல்வத்தைச் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியிற் பெற்று ஆங்கு நல் ஆசிரியனாகக் கல்வி கற்பித்து சிறந்த நிர்வாக அதிபராகப் பணிபுரிந்து அமரத்துவம் பெற்றார். இவரின் கல்விப்பணிகளை எடுத்தியம்ப கல்விச் சமூகம் செய்த அஞ்சலிகள் சான்று பகரும். இவர் யாழ். பல்கலைக்கழக மூதவை உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளார்.

அமரர் திரு. நாகரத்தினம் அவர்கள் வள்ளிநாயகி என்பவரை நன் மனையாளாகப் பெற்று இல்லறத்தின் பெறுபேறாக மூன்று நன்மக்களைப் பெற்றார், அவர்களும் கல்வியில் சிறந்து விளங்குகின்றனர்.

கல்விப் பணி ஆற்றி அமரத்துவம் பெற்ற திரு. நாகரத்தினம் அவர்களின் ஆத்மா இறைபதம் அடைய எல்லாம்வல்ல துர்க்காதேவியின் பாதங்களைத் துதிக்கின்றேன்.

**துர்க்கா சரணம்! சரணம்!! சரணம்!!!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

அம்பாள் துணை

தெல்லிப்பழை

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

தலைவர்

**செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, J. P. அவர்கள்**

# அஞ்சலிக்குரிய ஆசிரியர்

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் வளர்ச்சிக்கும் பெருமைக்கும் காரணர்களாக விளங்கியவர்களில் குறிப்பிடத்தக்கவர் அமரர் நாகரத்தினம் அவர்கள். இக் கல்லூரியில் மாணவனாகவும், ஆசிரியராகவும் அதிபராகவும் பணிபுரிந்த சிறப்பு இவருக்கு உண்டு. தெல்லிப் பழையும் சுன்னாகமும் இணைந்த பெருமையோடு எத்தனையோ குடும்பங்கள் எம்மத்தியில் இடம்பெற்றுள்ளன. கல்வியிலும் கண்ணியத்திலும் செல்வாக்கிலும் கடவுள் நம்பிக்கையிலும் இக்குடும்ப உறுப்பினர்கள் வாழ்ந்து கொண்டிருப்பது கண்கூடு. அமரர் பொன். நாகரத்தினம் அவர்களும் சுன்னாகத்தில் பிறந்து கல்வி கற்று தெல்லிப்பழையிலே திருமணம் செய்து எங்கள் ஆலயத்தோடு ஈடுபாடு காட்டியவர். இவருடைய பாரியார் துர்க்காதேவி பெண்கள் தொண்டர் சபையில் மூத்த உறுப்பினராகக் கடந்த பதினைந்து ஆண்டுகளாகப் பணி புரிந்து வருகிறார். தனது மனைவி ஆற்றும் ஆலயப்பணிகளுக்கு அனைத்து வகையிலும் உறுதுணையாக இருந்து ஊக்குவித்து வந்தவர் இவர். கடமை உணர்விலும் காலந் தவறாது கருமங்கள் ஆற்றுவதிலும் நிகரற்றவர் இவர் என்பதை நான் நன்கு அறிவேன். இவருடைய வாழ்விலே எளிமையும் இதமான பேச்சும் எல்லாராலும் விரும்பத்தக்க பண்புகளாக அமைந்தன. இதனாலே எங்கள் எல்லோரது உள்ளங்களிலேயும் இடம்பெற்றார். இதனால் இப்பெரியாரின் ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்திக்க வேண்டிய கடமை எமக்குண்டு.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். பல்கலைக்கழகம்
துணை வேந்தர்
பேராசிரியர்
**சு. குணரத்தினம்**
அவர்கள்

திரு. பி. நாகரத்தினம் அவர்கள் ஸ்கந்தவரோதயக் கல்லூரியிலே தனது கல்வியை ஆரம்பித்து பல்லாண்டுகளாக அங்கு ஆசிரியராகப் பணிபுரிந்து ஈற்றில் அக்கல்லூரியிலேயே ஏறக்குறைய எட்டு ஆண்டுகளாக அதிபராகக் கடமையாற்றியவர். அக்கல்லூரியின் புகழ்பூத்த அதிபரான 'ஒறேற்றர்' சுப்பிரமணியத்தின் வழியிலேயே நின்று அக்கல்லூரியின் மேம்பாட்டுக்கு அயராது உழைத்தவர். அவர் ஒரு சிறந்த நிர்வாகி மட்டுமல்லாது ஒரு ஆற்றல்மிக்க விஞ்ஞான ஆசிரியராகவும் திகழ்ந்தார். குறிப்பாக உயர்தர மாணவர்களுக்குத் தாவரவியலைக் கற்பிப்பதில் அவர் ஆற்றிய பணி போற்றற்குரியது; அவரின் மாணவர்களிற் பலர் விஞ்ஞான, வைத்திய கலாநிதிப் பட்டதாரிகளாகத் திகழ்வது அவரின் ஆற்றலுக்கும் தகைமைக்கும் எடுத்துக் காட்டாகும்.

திரு. நாகரத்தினம் கல்விப்பணியுடன் நின்றுவிடாது சமய, சமூகப்பணிகளிலும் பெரும் பங்காற்றியவர். அவரது நீண்டகால ஆசிரியத் தொண்டையும் சமூகப்பணியையும் நிர்வாகத்திறனையும் கருத்திற்கொண்டே பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு அவரை யாழ். பல்கலைக்கழகப் பேரவையின் ஒரு உறுப்பினராக நியமனம் செய்தது. அவர் எமது பேரவையில் உறுப்பினராக இருந்தது ஒரு சிலமாதங்களேயாயினும் இக்குறுகியகாலத்தில் அவருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. அவர் பழகுவதற்கு இனியவராகவும், பண்பாளராகவும், பல்கலைக்கழக முன்னேற்றத்தில் அதிக அக்கறை உள்ளவராகவும் காணப்பட்டார். பேரவைக் கூட்டங்களில் அவர் கூறும் கருத்துக்கள் அவரது ஆழ்ந்த அறிவையும் கல்வித்துறையில் அவரது அனுபவத்தையும் புலமையையும் வெளிப்படுத்துவனவாய் இருந்தன. அன்னாரது மறைவு அவரது குடும்பத்தினருக்கு மட்டுமன்றி எமது பல்கலைக்கழகத்திற்கும் ஏற்பட்ட ஒரு பேரிழப்பாகும்.

அமரர் நாகரத்தினம் அவர்களின் ஆத்மா
சாந்திடைவதாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

T. T. K. ஏழாலை

# இமையெனக் காத்துநின்றீர் எங்கு சென்றுற்றீரையா

1. அறிவெனுஞ் சுடரதேற்றும் ஆள்வுடை ஆசானாய் நல்
நெறி தவறாது நின்று நீண்டநாள் சேவை செய்த
செறிவுறு திறமையால்நற் சீருடை அதிபராகி
அறிஞர்கள் போற்றநின்ற அண்ணலே எங்கு சென்றீர்.

2. ஓய்விலும் உனதுசேவை உயர்கல்விக் குகந்ததென்று
ஆய்வுடை அறிஞர் வேண்ட அமர்ந்தனை மூதவைமேல்
காய்வினும் அன்புகாட்டும் கருணை வாரிதியே உங்கள்
சாய்வினை எண்ணி யெண்ணிச் சந்ததம் வாடுகின்றோம்.

3. அமைதியாய் வாழ்ந்துநாளும் அன்பினைச் சொரிந்தீ ரென்றும்
பகைமையே இல்லென் பாங்கில் பாரினில் அடிபதித்தீர்
தகைவுறு மனைவி மைந்தன் தமரையெக்காலும் கண்ணின்
இமையெனக் காத்துநின்றீர் எங்கு சென்றுற்றீரையா.

4. நாகரத்தினப் பெயரோன் நானில வாழ்வைத் துறந்து
ஏகனடியே துணையென்றேகினான் - ஆகையினால்
நாமும் அவனடியே நற்றுணையென் றெண்ணிநிதம்
பாதந் தொழுவோம் பணிந்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்
சுன்னாகம்
ஸ்கந்தவரோதயக் கல்லூரி
பிரதி அதிபர்
க. புவனேந்திரநாதன்
அவர்கள்

# என் இனிய ஆசான்
# பொன். நாகரத்தினம் அவர்கள்

மாணவனாய் ஸ்கந்தாவில் மனமகிழ்ந்து
கல்விபயின் றுயர்வு கண்டு
ஆணவமே சிறிதுமிலா ஆசானாகி
அளித்தசேவை யதனாலே அதிபராகி
பேணியநற் பெயர்விளங்க கொத்தணி
அதிபருமாய்க் கொண்ட பெயருடனே
காணுகின்ற காட்சியெல்லாம் களிப்போடு
கவினுறவே கரைந்ததுவே நொடிப்பொழுதில்.

முப்பதினோ டேழாண்டு முழுச்சேவை
புரிந்துநின்ற முதன்மை யாள
செப்பரிய ஆசானாய் ஸ்கந்தா
புகழ்விளங்கி மிளிர்ந்து ஓங்க
ஒப்பரிய 'ஒறேற்றர்' காலமோங்கி
ஒளிவீசி நின்றிடவே நீயுமங்கே
எப்பகுதி வாழுநரும் ஏத்திநிற்ப
எழில்மிகு சேவை செய்தோய்!

தெய்வீக ஒளிவிளங்கும் தெல்லியூர்
தேவி துர்க்கா திருவருள்
உய்விக்க உவந்து மனைவாழ்ந்தாய்!
உனைத் துணையெனப் பெற்றமங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வையம் புகழ் வள்ளிநாயகி
வாழ்விலே மைந்தர் மூவர்
கைவந்த கல்விச்செல்வக் களஞ்சியங்கள்
காசினியிற் கவினுடனே வாழ்க!

வஞ்சமிலா தெவருடனும் வாய்விட்டு
வகைவகையாய்க் கதைகள் பல
நெஞ்சங்கள் மகிழ்ந்திடவும் நினைந்து
நாம் சிரித்திடவும் செய்து வைப்பீர்!
தஞ்சமென வருவோர்க்குத் தகுதிகண்டு
தக்கநல் லுதவி அளித்திடும்
நெஞ்சதனை மறவோமே எந்நாளும்
ஸ்கந்தனே துணையாகும் ஆத்மசாந்திக்காய்!

ஓம் சாயி ராம்

உள்ளது போதும் என்று அமைந்த மனமே குறைவற்ற களஞ்சியம்.

— நாவலர்பெருமான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஸ்ரீ துர்க்காதேவி துணை

**சதா. லோகேஸ்வரன்**

அவர்கள்

சட்டத்தரணி, கொழும்பு.

## " நாகப்பா மாமா "

காலஞ் சென்ற அதிபர் நாகரத்தினம் அவர்களை உறவினரும் நண்பர்கள் சிலரும் '' நாகப்பா '' என்ற செல்லப்பெயர் கொண்டு அழைத்து வந்திருக்கிறார்கள்.

1981 ஆம் ஆண்டிலிருந்து அவருடனும் அவருடைய குடும்ப உறுப்பினர்களுடனும் நெருக்கமான உறவு ஏற்பட்டது. இவர் பழகுவதற்கு மிகவும் எளிமையானவர். இனிமையாகப் பேசுவார். தேவையானதைமட்டும் சொல்லும் பாங்குடையவர். தானும் தன்பாடுமாக இருப்பவர். எளிமை அவரின் பேச்சில் மட்டுமன்றி அவர் அணியும் உடையிலும் போக்குவரத்துச் செய்ய வைத்திருந்த வாகனத்திலும் கூடக் காணக் கூடியதாக இருந்தது.

ஒரு முறை இவரைச் சந்திக்க விரும்பி இவர் அதிபராகக் கடமையாற்றிய ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்குப் போகவேண்டி நேரிட்டது நான் அங்கு சென்ற நேரம் அவர் அலுவலகத்தில் இருக்கவில்லை. அங்கு கடமையிலிருந்த லிகிதரை அணுகி விசாரித்தபோது அவர் இப்பொழுது வகுப்பு எடுத்துக்கொண்டு இருக்கிறார். குழப்பினால் இன்று முழுவதும் குழம்பியே விடுவார் என்று அந்த லிகிதர் என்னிடம் கூறினார். அவரின் வருகைக் காக முப்பது நிமிடங்கள் காத்திருந்தேன். அவர் வகுப்பிலிருந்து வெளியேறி அலுவலகம் நோக்கி வருவதைக்கண்டு நான் மகிழ்ச்சியடைந்தவேளை அவரை இடைமறித்த விளையாட்டுப் பகுதிப் பொறுப்பாளருடன் அவர் மைதானப் பக்கம் போவதை அவதானித்தேன். மேலும் ஒரு மணித்தியாலத்தின் பின்பே அவருடன் பேசச் சந்தர்ப்பம் கிடைத்தது. லிகிதர் கூறிய வார்த்தைகள் எவ்வளவு உண்மையான தென்பதை நான் அப்போது தெரிந்து கொண்டேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கறை ஆர்வம் அவதானம் ஆகிய மூன்றும் வைத்துச் செயற்பட்ட செம்மல் ஒறேற்றர் ஐயா போன்ற சிறந்த அதிபர்களின் வரிசையில் வைத்து எண்ணப்படவேண்டியவர்களுள் இவரும் ஒருவராவர்.

இவரின் புத்திரர்கள் மூவரும் கல்வித்துறையில் முன்னேறி வருவதை நாமறிவோம். தந்தைவழி மைந்தர்களாக இருக்க வாழ்த்துக்கள் கூறி அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி !

நம்முடைய குற்றங்கள் இவைகள் என்று நமக்குத் தெரிவித்து அவைகளை நீக்கி நடக்கும் நெறியை நமக்குப் போதிக்கின்றவர்களே நமக்கு உத்தம சிநேகிதர்கள்.

— நாவலர்பெருமான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் - சுன்னாகம்

## திரு. பொன்னுத்துரை நாகரத்தினம்

அவர்கள்

சிவபதமெய்தியமை

குறித்த

# நினைவுப் பாக்கள்

### வெண்பா

செப்பும் பவவாண்டு சேரிடபஞ் சாரபரம்
ஒப்பில் நவமிதனை யுற்றபுதன் - இப்புவியில்
உற்றநாக ரத்தினமாம் ஓங்குபுகழ் மாமகிபன்
நற்பதவி தானடைந்த நாள்

### ஆசிரியப் பா

மலர்தலை யுலகிற் புலமிகு மறிஞர்
பலர்வதி நிலனாய்ப் பனிமதி வேணியன்
உலகுய வெழுந்தருள் உம்பருந் துதிக்கும்
கோணா சலஞ்சீர்க்க கேதீச் சரமும்
குன்ற மெறிந்த குமரவேள் தங்கும்
கதிரையம் பதியும் கவினுறு நல்லையும்
மாருதப் புரவீக வல்லி வணங்க
மாதுய ரகற்றிய மாவையம் பதியும்
எத்திக் கிலுமுயர் வெய்தி யிலங்கிடும்
இலங்கைமா தேவிக் கெழில்தரு கீர்த்தித்
திருநுதற் திலகம் என்னத் திகழும்
யாழ்ப்பாண மெனு மியனகர் வடபால்
அந்தணர் மேலோர் அருங்கலை வல்லோர்
இந்திரச் செல்வம் எய்திய வரவோர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிழ்ந் துறைகின்ற வளமா ரிருக்கை
வானே றிலாங்கலி மாபலா வாழை
கானமார் கமுகு கனிதரு மரங்கள்
மன்னிய செல்வக் களனிகள் மருவிய
சுன்னாக மென்னச் சாற்றுநற் பதிக்கண்
தண்டிகைக் கனக ராயரெனும் முதலியார்
வம்சந் துலங்க வையகத் துற்றோன்
வேளாண் மரபின் மிக்குயர் குலத்தில்
வந்துற் பவித்த மாட்சி மிக்குடையோன்
பொன்னுத் துரையாம் புவிபுகழ் மகிபன்
தான்பெற் றுவந்த தாவிலா வள்ளல்
சுப்பிர மணியத் தூயநல் லறிஞன்
அம்பல வாணர் தன்மக ளாகத்
தரணியிற் தோன்றிய தாவிலா வனிதை
பருவத பத்தினிப் பிள்ளை மாதினை
நன்மண மியற்றி நயப்பொடு மேவியே
செய்யுந் தவத்தினி லெய்திய மைந்தன்
“தோன்றிற் புகழொடு தோன்றுக” என்ற
வான்புகழ் வள்ளுவன் பொருளுரைக் கேற்ப
வையக மீதில் வந்தவ தரித்தனன்
மயிலணிச் சைவ வித்தியா சாலையில்
ஆரம்பக் கல்வி பயின்ற பின்னர்
ஸ்கந்த வரோதயக் கழகந் தன்னிலும்
யாழ்நகர் இந்துக் கல்லூரி தன்னிலும்
உயர்கலை கற்றுத் தேறியே பின்னாற்
சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரி யதனில்
விஞ்ஞான மாணிச் சிறப்புப் பட்டம்
பெற்ற பின்னர் போராதனைப் பல்கலைக்
கழகத்தே டிப்புளோமா கற்றுத் தேறினன்
ஆரம்ப காலந் தன்னில் ஆசிரியத்

தொழில் தன்னை யாழ்நகர் சைவசன்
மார்க்க வித்தியா கழகந் தன்னில்
ஒன்று ஒன்பது ஐந்து ஒன்றில் (1951)
ஆரம்பித்தே அமைபின் நாளிற் பற்றுடன்
ஒன்று ஒன்பது ஐந்து மூன்றில் (1953)
ஸ்கந்த வரோதயக் கல்லூரி யதனில்
ஆசிரிய ராக அமர்ந்து அரும்பணி
பற்பல ஆற்றி மாணவர் மதிப்பும்
ஆசிரிய ருடனே பெற்றோர் மதிப்பும்
பெற்றுத் திகழ்ந்து படிப்படி யாக
உப அதிப ராகவும் அதிப ராகவும்
பதவிகள் உயர்ச்சி பெற்றுச் சிறந்தே
ஈற்றினில் கொத்தணி அதிபர் பதவி
வகித்துப் பாரினிற் புகழுடன் வாழ்ந்தனன்
ஒன்று ஒன்பது எட்டு ஒன்பதில் (1989)
மேதினி மீதில் முழுச்சுகம் கண்டு
மகிழ்வுற வேண்டியே ஓய்வு பெற்றனன்
தனக்கென வாழாப் பிறர்க்குரி யாளர்
வரிசையி லிவர்பெயர் என்றும் வழங்க
வையக மீதினில் வாழ்ந்த புகழோன்
ஊருணிநீர் நிறைந் துற்றா லெனவும்
பயன்மர முள்ளூர்ப் பழுத்தா லெனவும்
பலர்க்கும் பயன்படும் பண்புமிக் குடையோன்
செல்விருந் தோம்பி வருவிருந் தினரை
நாடி மகிழ்வுறும் நன்மனம் படைத்தோன்
சமயா சாரம் தான்மிக வுடையான்
**நாக ரத்தின** மெனப்பகர் நாமன்
அன்னவன்
இல்லற மல்லது நல்லற மன்றெனும்
எழில்மொழு காட்டி எய்துரைக் கேற்ப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெல்லி யம்பதி யெனப்பகர் பதியினில்
வைத்திய நாக முதலியார் வழிவரு
கனக சுந்தரமும் மாதுமா மாங்கமும்
தந்த வனப்பியல் வடமீன் நங்கை
மாசிலா மனத்தாள் வள்ளி நாயகியை
வேத மரபினில் வேதியர் வாழ்த்த
வரித்தனன் வாழ்க்கையை மேலும் உயர்த்த
ஒன்றிய உள்ளம் ஒருவிய பகைமை
மருவிய உறவு மறுவில் புகழுடன்
இயல்புடை மூவர் இருந்தார் தென்புலம்
விருந்து தெய்வம் ஒக்கல் எல்லாம்
ஒன்றி இல்லறம் இனிதுற அமைந்த
காலைத் தண்மதி யென்னப் பாரினில்
தம்பொரு ளாகப் பெற்ற தனையர்
லண்டன்மா நகரிற் கலைபயில் சுதர்சன்
சிங்கப்பூர் தன்னிற் பொறியிய லாளர்
சேவை யாற்றும் சுகந்தன் தன்னொடு
யாழ்நகர் வெளிவாரிப் பட்டப் படிப்பு
மாணவ னாக விளங்கும் சுகிர்தன்
அறிவன அறிந்த நன்மக்க ளாகப்
பாரும் மகிழப் பெற்றே மகிழ்ந்தனன்
ஒய்வு பெற்ற வைத்திய கலாநிதி
சுப்பிர மணியம் தன்னை மணந்தே
வைத்தியகலாநிதி யோ விநாயகம் தன்பெருந்
தலைவ னாகத் தரணியி லுறவே
யோகினி மகவைப் பெற்று மகிழ்ந்த
சீர்சால் நங்கை வைத்தியகலாநிதி லலிதா
அனுரூபா தன்னை மணவினை பூண்டே
குகப் பிரியன் பிரதாகினி தம்மை
எய்தியே வாழும் வைத்தியகலாநிதி ரவிராஜ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்மக்க ளாக நானிலத் துற்ற
இலங்கிழை நல்லாள் இரத்தின மணி
மங்கையர் திலகம் பத்மா வதியை
வரித்தே சாந்தினி தன்னை மணந்து
கஜன் சாவித்திரி என்னுமிரு மணிகளை
எய்தியே வாழும் கணக்காளர் வினோதன்
வாசுகி மாதினை நன்மண மியற்றியே
உமேசன் மகனைப் பெற்ற புகழோன்
வைத்திய கலாநிதி அஜந்தன் தானும்
புத்திர ராகப் பாரினிற் பெற்ற
பேறுடை மேயோன் வாழ்வு நீத்த
வைத்திய கலாநிதி இராச ரத்தினம்
உடன்பிறப் பென்ன உள்ளத் துகந்தே
தடம்புவி வாழ்ந்த தாவிலா வள்ளல்
மங்கள நாயகி தன்மனைவி யாகத்
தரணியி லுறவே கெங்கா தேவியை
வரித்தே சஞ்சீவனைப் பெற்ற கேயர்
களஞ்சிய பொறுப்பாள ராகும் செம்மல்
விமல ராசா தன்னுடன் கப்பல்
பொறியிய லாளர் சுதந்திர நாதனை
மணந்தே கோபி நாத் பிரேம
நாத் மக்களைப் பெற்ற பேறுடை
மாது நிரஞ்சலா தேவி தம்மைப்
பாரினில் பெற்றே பெரிதிணைப் பாறிய
பகிரங்க வேலைப் பகுதி ஓவசியர்
கணேச ரத்தினம் எனப்பகர் நாமம்
இரத்தின மணியின் நாயக னாகிய
வைத்திய கலாநிதி சுப்பிர மணியம்
ஓய்வு பெற்ற வைத்திய கலாநிதி
அப்பாத் துரையை வரித்தே பொறியிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாளர் தாரணி புகழ்சிவ பாலனை
மணவினை பூண்டே மாலினியைப் பெற்ற
வைத்திய கலாநிதி மாலதி யுடனே
கணனிப் பொறியிய லாளர் திவாகரன்
தன்னை நன்மண மியற்றிய விஞ்ஞானப்
பட்ட தாரிணி மாதினி தன்னொடு
யாழ்நகர் பல்கலைக் கழக விரிவுரை
யாளர் உயர்தர எம்எஸ்ஸி பட்டதாரி
செந்தூரன் ஆகிய சேய்களை அவனியி
லெய்திய ஓய்வு பெற்ற ஆசிரியை
B. A. பட்டதாரிணி சரஸ்வதி தானும்
தேவிகா ராணியைக் கடிமண மியற்றியே
சட்டப் படிப்புக் கல்லூரி மாணவன்
பரதன் தன்னுடன் ஆசிரியை வர்த்தக
மாணி பாமா தம்மைப் பெற்றே
அவுஸ் ரேலியா நகரில் பொறியிய
லாளர் பதவி வகிக்கும் சிர்சால்
செம்மல் கெங்கா தரன் தானும்
மைத்துன ராக மாநிலத் துற்றனன்
இன்ன இனியன் நற்குண வாளன்
செப்பும் பவவருடம் வைகாசி நன்மதி
புதன் என்னப் பகலுநல் வாரம்
அபர பக்கம் அமையும் நவம்
எனுமிவை யமைந்த இனியநற் றினத்தே
தன்வாழ் வொழித்துத் தான்மறைந் தனரே
அமரரின் ஆன்மா சாந்தி அடைந்திட
அரனார் பாதம் தொழுவோம் யாமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுநிலை அஞ்சலி

## கட்டளைக் கலித்துறை

அன்பும் பொறையு மடியார் கணேசமு மாதுலரின்
துன்பந் தவிர்ந்தரு ளீகையு மாந்தர் துதிநடுவும்
இன்பந் தருநன் மொழியு மெழில்தரு வின்முகமும்
உன்னோர் பெறவினி யுண்டோ வுலகினி லுத்தமனே.

## மனையாள் கண்ணீர்

பொன்னாரு மங்கல் நாணென் கழுத்திற் புனைந்தவந்நாள்
பொன்னே யுனைப்பிரி யேனினி யென்னப் புகன்றமொழி
மன்னா மறந்தனை யோவின்று யான்செய்த வஞ்சமென்னோ
என்னே பிரமன் விதித்தன னேபிரி வென்செய்வேனே.

## மக்கள் கதறல்

பன்னா ளருந்தவஞ் செய்தெமை யெய்திப் பலவிதமாய்
இந்நாள் வரையிலு மன்பாய் வளர்த்த வியல்மறந்து
பொன்னாடு புக்கனை யையா வெமையிப் புவியின்மிசை
யெந்நாளிற் காண வருவாய் உரைநல் விரக்கமுற்றே.

## உடன்பிறந்தோர் சோகம்

செந்தா மரையாய்த் திகழுமுன் தோற்றப் பொலிவுகண்டே
சிந்தை மகிழ்ந்தே தினந்தினம் நல்வாழ்வு கொண்டனமால்
முந்தே புரிந்தவெம் நல்வினை யின்றே முடிந்ததுவோ
வந்தே யணைந்தெம் மனத்துயர் போக்கிடும் நாளெதுவே

## தேற்றம்

மன்னர் புகழ்நாக ரத்தினம் தான்மறைந்தார்
என்னேகாண் ஏங்கி இரங்குகின்றீர் - மன்னும்
" புறவாழி சூழ்ந்த புவனத்தே தோன்றி
இறவாது வாழ்கின்றார் யார் "

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

*02-06-1994* இல் அமரராகிவிட்ட எனது கணவரும் எமது தந்தையுமாகிய திரு. பொன். நாகரத்தினம் அவர்களின் மரணச் செய்திகேட்டு விரைந்து வந்து எமக்கு ஆறுதல் கூறியோர்க்கும் வேண்டிய உதவிகள் புரிந்தோர்க்கும். அவரது இறுதிச் சடங்கு, யாத்திரை ஆகியவற்றில் பங்கு கொண்டோருக்கும், யாழ். மருத்துவமனையில் சிகிச்சைபுரிந்த வைத்திய நிபுணர்கள் மற்றும் ஏனைய ஊழியர்கட்கும் உளமார்ந்த எமது நன்றியறிதலைத் தெரிவிப்பதோடு

இன்று எம்மில்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் எமது அழைப்பை ஏற்றுச் சமூகந்தந்த அனைவருக்கும் இந்த நினைவுமலருக்கு இரங்கலுரை ஆத்மசாந்தியுரை வழங்கிய பெரியார்களுக்கும் எமது உளங் கனிந்த நன்றியறிதலைத் தெரிவிக்கின்றோம்.

கப்பல் வளவு, மனைவி
சுன்னாகம். *03-07-1994* பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமகள் அழுத்தகம், சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org